சுருக்கம்

அறிவிப்புகள் – 2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – இடஒதுக்கீடு கொள்கை மற்றும் சமூக நீதி குறித்து ஒரு புத்தகம் வெளியிடுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல (பிநசிபி) த் துறை

அரசாணை (நிலை) எண். 61 நாள் 12.11.2021

பிலவ, ஐப்பசி 26

திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண்.டி3/5641/2021, நாள் 17.9.2021.

------

ஆணை:

2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் "தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்து வரும் இடஒதுக்கீட்டுக் கொள்கை பற்றியும், சமூக நீதிசெயல்பாடுகள் பற்றியும் வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையில் இடஒதுக்கீடு மற்றும் சமூக நீதி குறித்து பல்வேறு தகவல்கள் கொண்ட புத்தகம் 5 இலட்சம் ரூபாய் செலவில் வெளியிடப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2) மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக பெறப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துருவில் தமிழ்நாட்டிலுள்ள இட ஒதுக்கீடு மற்றும் சமூக நீதி குறித்து பல்வேறு தகவல்கள் கொண்ட புத்தகம் தயாரித்து வெளியிட கல்வியாளர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், இடஒதுக்கீடு தொடர்பான வல்லுநர்கள், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணைய அலுவலர்கள், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்கக அலுவலர்கள் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்கக அலுவலர்களையும் கொண்டு குழு அமைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் இதற்கென நடப்பு நிதியாண்டில் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்து ஆணை பிறப்பிக்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3) இக்கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள இட ஒதுக்கீடு மற்றும் சமூக நீதி குறித்து பல்வேறு தகவல்கள் கொண்ட புத்தகத்தை பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் மூலம் ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) செலவில் வெளியிட நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4) புத்தகம் தயாரித்து வெளியிட குழு அமைக்கப்பட்டபின் செலவின விவரங்களுடன் நிதி ஒப்பளிப்பிற்கான கருத்துருவை அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5) இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.49309/நிதி (பி, மி.பி (ம) சி.ந) துறை, நாள்.10.11.2021-ன்படி நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

ஆ. கார்த்திக்.
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர்,
சென்னை – 5.
நகல்
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை – 9
நிதி (பி,மி.பி (ம) சி.ந) த் துறை, சென்னை – 9.
பி, மி.பி (ம) சி.ந (பிந3) த் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உபரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்